**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-600006**
**மாநிலத்திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.இரா. சுதன் இ.ஆ.ப.,**

ந.க.எண்: **ACE/118/ஆ3/CG-10/ஒபக/2022**, நாள்: **02.12.2022**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - 12ம் வகுப்பு மாணவரின் உத்தேச உயர்கல்வி விருப்ப பாடப் பிரிவுகள் அறிதல் – அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.
2. ந.க.எண்:2818/ஊ4/2022, நாள்:08.11.2022 மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

*********

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 12ம் வகுப்பு மாணவர்கள் பொது தேர்வு முடித்து, தாம் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் உயர்கல்வி படிப்புகள் தொடர செய்தல் வேண்டும் என்கின்ற நோக்கில் ஒவ்வொரு மாணவர் மீதும் தனி கவனம் செலுத்தி ஊக்குவித்து உயர்கல்வி தொடர அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, தற்போது, பள்ளிக் கல்வி துறையில் இவ்வாண்டு 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்புகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆர்வம் ஏற்படுத்தி, அதன் மூலம் தனது விருப்ப பாடப்பிரிவினை தெரிவு செய்திட தேவையான திறன்களை வளர்த்து, 2023-24ல் தான் பயில விரும்பும்

பாடபிரிவுகள் (Higher Education Course/Stream) ஏதேனும் மூன்றினை முன்னுரிமையின் (Tentative Options) அடிப்படையில் மாணவரால் தெரிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறு தெரிவு செய்த உத்தேசமாக பாடப்பிரிவுகளை பள்ளிக் கல்வி துறையின் "நான் முதல்வன்" போர்டலில் உயர் தொழில்நுட்ப ஆய்வக (Hi-tech Lab) கணினிகளை பயன்படுத்தி ஒவ்வொரு மாணவருக்கும் பதிவேற்றம் செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி Career Counsellors பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் மற்றும் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

**அ. உயர்கல்வி சிற்றேடுகள் (Brochure/ Prospectus)**

(a) அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் **இச்செயல்முறையினை பெற்றவுடன்** சார்ந்த மாவட்டத்தில் செயல்படும் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல், சட்டம், வேளாண்மை, மீன்வளம் மற்றும் பிற கல்லூரிகளில் வழங்கப்படும் பாடப்பிரிவுகள் சார்ந்த விவரங்கள் கொண்ட சிற்றேடுகளை (Brochure/Prospectus) கல்லூரிகளில் இருந்து பெற்று மாணவர்கள் பார்வையில் காணுமாறு ஒவ்வோரு பள்ளியிலும் அறிவிப்பு பலகையில் **காட்சிப்படுத்திடல்** வேண்டும்.

(b) மேலும், இச்சிற்றேடுகளை பயன்படுத்தி ஒவ்வொரு கல்லூரிகளில் வழங்கப்படும் படிப்புகள் குறித்து அறிந்து கொள்ள இயலும் என்பதனை மாணவர்களுக்கு விளக்குதல் வேண்டும்.

(c) வகுப்பறையில் மாணவர்களை சிறு குழுக்களாக பிரித்து சிற்றேடுகள் வழங்கி கலந்துரையாட செய்தல் வேண்டும்.

**ஆ. உயர்கல்வி சார்ந்த படிப்புகள்/வாய்ப்புகள்**

மேலும், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வாயிலாக அனைத்து பள்ளிகளிலும் உள்ள உயர்கல்வி வழிகாட்டி முதுநிலை ஆசிரியர்களுக்கு பார்வை 2ல் காணும் கடிதம் வாயிலாக ***உயர்கல்வி சார்ந்த படிப்புகள்/வாய்ப்புகள் குறித்த பயிற்சிகள்*** நவம்பர் 2022ல் சார்ந்த மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது. அப்பயிற்சியின் போது வழங்கப்பட்ட விவரங்களையும், காணொளி காட்சிகளையும் (videos) மாணவர்களுக்கு வழங்கி உயர்கல்வி சார்ந்து விழிப்புணர்வை உருவாக்கி அதில் ஆர்வம் ஏற்படுத்திடல் வேண்டும்.

**அனைத்து காணொளிகளும் நான் முதல்வன் போர்டலில் https://naanmudhalavan.tnschools.gov.in பதிவேற்றம் செய்யப்படும். தற்காலிகமாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள காணொளிகளின் இணைய இணைப்புகள் பின்வருமாறு.**

| S. No | Video Links | Topics |
|---|---|---|
| 1. | https://www.youtube.com/watch?v=6dSNdvhgG1c | Engineering |
| 2. | https://youtu.be/gv9PQ-QRT_Y | Medicine |
| 3. | https://youtu.be/Su2tcLAFZqA | Arts & Science |
| 4. | https://youtu.be/PuivB6wsBCY | Architecture |
| 5. | https://youtu.be/ppn9A8OCITw | Law college application &seat |
| 6. | https://youtu.be/64VXoveloyU | Fisheries application procedure – Part I |

| | | |
|---|---|---|
| 7. | https://youtu.be/WAvFAxUQ2hA | Fisheries application procedure – Part |
| 8. | https://youtu.be/u7Gl6yrDLBg | TANUVAS application procedure |

இதனை அனைத்து மாணவர்களும் Hi-Tech Lab–கணினிகளை பயன்படுத்தி காண செய்து பயனடைய வைத்தல் வேண்டும். மேலும் முக்கிய விவரங்களை மாணவர்கள் குறிப்பெடுத்து வைத்து கொள்ள செய்தல் வேண்டும்.பிற பாடபிரிவுகளுக்கான காணொளிகள்விரைவில் பதிவேற்றம் செய்யப்படும்.

**இ. உயர்கல்வி வேலை வாய்ப்பு வழிகாட்டி கையேடு**

இக்கையேட்டில் "உயர்கல்விப் படிப்புகளைப் புரிந்து கொள்ளுதல்" (பக்கம் எண் –13) பாடத்தில் உள்ள பின்வரும் விவரங்களை மாணவர்களுக்கு புரிந்து கொள்ளும் வண்ணம் பயிற்றுவித்தல் வேண்டும்.

- தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள்
- தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசின் முக்கிய கல்வி நிறுவனங்கள்
- நுழைவு தேர்வுகள்
- அகில இந்திய நுழைவுத் தேர்வுகள்
- அறிவியல் படிப்புகள்
- மருத்துவப்படிப்புகள்
- பொறியியல் படிப்புகள்
- தொழில் படிப்புகள்
- கலைப்புலப் படிப்புகள்

இதன் மூலம் மாணவர்கள் 12ஆம் வகுப்புக்குப் பிறகு தங்களது விருப்பத்துக்கு ஏற்ற படிப்பைத் தேர்வு செய்ய இயலும்.

ஈ. உயர்கல்வி சேர்க்கை விண்ணப்ப விவரங்கள்:

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல், மருத்துவம் என 33 படிப்புகள் சார்ந்த கல்லூரி சேர்க்கை வின்ணப்பங்களில் பொதுவாக கோரப்படும் 51 விவரங்கள் இத்துடன் இணைப்பு-Iல் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களில் கோரப்படும் இவ்விவரங்களை மாணவர்கள் எவ்வாறு பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதனை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்று தருதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தலில் உள்ள இடர்பாடுகள் களையப்படும். மேலும் இதுகுறித்த விளக்க காணொளி பள்ளிகளுக்கு 07.12.2022 அன்று முதன்மைப் பயிற்சியாளர்கள் வாயிலாக அனைத்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் அனுப்பப்படும்.

மேற்காண் அனைத்து செயல்பாடுகளும் 07.12.2022 மற்றும் 09.12.2022 ஆகிய நாட்களில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அதன் பின்னரே மாணவர்களின் உயர்கல்வி விருப்ப பாடங்கள் (Options for Higher Education) சார்ந்த விவரங்கள் பெறுதல் வேண்டும்.

உ. உயர்கல்வி விருப்ப பாடங்கள் தெரிவு :

இதற்கிடையே, இவ்வாண்டு 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத உள்ள அனைத்து மாணவர்களும் "நான் முதல்வன்" போர்டலில் உள்நுழைந்து (login) தனக்கான "https://naanmudhalavan.tnschools.gov.in/highereducationoptions" லிங்கை கிளிக் செய்து அதில் கோரப்பட்டுள்ள விவரங்களையும், 3 விருப்ப

பாடப் பிரிவுகளையும் தெரிவு செய்தல் வேண்டும். இச்செயல்பாடு 12.12.2022 முதல் மேற்கொள்ளப்பட வேண்டும். அனைத்து மாணவர்களும் விருப்பப்பாடங்களை தெரிவு செய்துள்ளனரா என்பதனை பள்ளி தலைமையாசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

**ஊ. மாணவர்களுக்கு "கல்லூரி" ஆர்வமுட்டடல்:**

அனைத்து அரசுப் பள்ளிகளில் இவ்வாண்டு 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் உயர்கல்வி பயில ஆர்வமூட்டுதல் சார்ந்து அருகாமை கல்லூரிகளுக்கு ஜனவரி–2023 மாதத்தில் அழைத்து செல்லும் (Exposure Visit) செயல்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது. இது குறித்து விரிவான விவரங்கள் பின்னர் வழங்கப்படும்.

**எ. கண்காணித்தல்**

**DIET பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள்**

உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் பயிற்சி பெற்ற 93 முதன்மை கருத்தாளர்கள் (DIET பேராசிரியர்கள்) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளை பார்வையிட்டு, மேற்கூறிய செயல்பாடுகள், அனைத்து மாணவர்களுக்கும் வழங்கி பின்னர் மாணவர்களிடம் 3 விருப்பப்பாடங்கள் பெறுதல் சார்ந்த பயிற்சி மேற்கொள்ளப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்காண் செயல்பாடுகளை சார்ந்த ஆசிரியர்கள் வாயிலாக இவ்வாண்டு

2023-24ல் மாணவர்கள் உயர்கல்வியில் தான் பயில விருப்பும் பாடபிரிவுகள் ஏதேனும் மூன்றினை முன்னுரிமையின் அடிப்படையில் தெரிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இச்செயல்முறை சார்ந்து கூடுதல் தகவல்/விளக்கங்களுக்கு திருமதி.ச.செல்வகுமாரி (9788859919), ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளலாம்.

**மாநில திட்ட இயக்குநர்**

2/12/22

**இணைப்பு:**

1. கல்லூரி சேர்க்கை விண்ணப்பங்களில் பொதுவாக கோரப்படும் விவரங்கள்

**பெறுநர்**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்
2. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

**நகல்**

**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்.
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்.
4. அனைத்து தலைமை ஆசிரியர்கள் (அரசுமேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாதிரி பள்ளிகள்).

# இணைப்பு –I

| Fields identified from 33 different online Applications of courses (not exhaustive) | |
|---|---|
| S.No | **Personal Details** |
| 1 | Candidate Name |
| 2 | Date of Birth |
| 3 | Mobile No |
| 4 | Email Id |
| 5 | Mother Tongue |
| 6 | Nationality |
| 7 | Name of the community |
| 8 | Name of the caste |
| 9 | Adhar Card number (Optional) |
| 10 | Religion |
| 11 | Blood Group |
| | **Course Preferences** |
| 12 | Course Applied for |
| | **Parents details** |
| 13 | Father/Gardian name |
| 14 | Father's education |
| 15 | Father's native |
| 16 | Mother name |
| 17 | Mother's education |
| 18 | Annual Income |
| 19 | Present Address / Communication Address |
| 20 | Premises No/Name |
| 21 | Sub-Locality |
| 22 | Locality |
| 23 | State |
| 24 | District |
| 25 | Pincode |
| | **Documents Uploading** |
| 26 | Photograph |
| 27 | Signature |
| 28 | Nativity Certificate |
| 29 | Transfer certificate |
| 30 | 10th Marksheet |
| 31 | 12th Marksheet |
| 32 | Parent's income certificate |
| 33 | NCC/NSS |
| 34 | State Domicile Certificate |
| 35 | First generation |

| | |
|---|---|
| | **Category of the candidate** |
| 36 | Caste certificates (Scheduled Caste/Schedules Tribes/Other Backward Classes |
| 37 | Non-Creamy Layer) |
| 38 | Disability Certificates issued by the appropriate authority |
| 39 | Eminent Sports person |
| 40 | Are you a first graduate |
| 41 | Below Poverty Line |
| | **Academic Details** |
| 42 | Class 12th marks |
| 43 | Passing status |
| 44 | passing year |
| 45 | Passed all the subject of HSC |
| 46 | Mark obtained |
| 47 | Have you studied 6th to 12th in Governement School? or RTE |
| | **School of Study Information** |
| 48 | Category of School |
| 49 | Civic status of school location |
| 50 | Have you studied 6th to 12th in Governement School? |
| 51 | Have you studied from 6th to 8th in Private school under RTE and studied 8th to 12th in Governement School? |